
# ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

**நீங்களோ ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கும்படி கட்டளையிடப்பட்டு இருக்கிறீர்கள் ஆனால் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் பேசும்படிக்கு அல்ல, ஒருவருக்காக ஒருவர் அன்பு கூரும்படிக்கே.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 59-07-12 ஒரு முற்றிலுமான விடுதலை

மற்றும் ஒரு சபை அங்கத்தினர் மற்ற அங்கத்தினருக்கு விரோதமாக பேசும் போது அது தவறு என்று நீங்கள் அறிந்து இருக்கிறீர்கள்.

நீங்களோ ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கும்படி கட்டளையிடப்பட்டு இருக் கிறீர்கள் ஆனால் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் பேசும்படிக்கு அல்ல, ஒருவருக் காக ஒருவர் அன்பு கூரும்படிக்கே.

மேலும் ஒருவர் வீழ்ந்து இருப்பா ரானால் அவரை தூக்கி எடுத்து அவருக்கு உதவிசெய்வோம்.

இப்பொழுது அது தாமே நம்மை ஒருங்கிணைந்த விசுவாசிகளின் கூட்ட மாய் ஆக்குகிறது.

இப்பொழுது நாம் அதற்கு கீழ்படி யாதபட்சத்தில் நாம் தேவனுக்கு கீழ்படி யாதவர்களும் அவருக்கு பிரியம் இல் லாமல் ஜீவிக்கிறவர்களாயுமிருப்போம்.

அப்படியாக இருக்கும்பட்சத்தில், நம் முடைய சபையும் நம்முடைய மக்களும் செழிப்படைய முடியாது, சபையானது தொடர்ந்து செல்லமுடியாது.

ஏனெனில் நாம் எல்லாரும் ஒற்றுமை இல்லாதவர்களாயிருக்கிறோம்.

இயேசுவானவர் கூறினது போல "புளிப்புள்ள கொஞ்ச மாவானது பிசைந்த

மாவனைத்தையும் உப்பப்பண்ணும்" (புளிப்பாக்கும்).



# யாராவது ஒருவர் தவறு செய்தால், உடனே அவருக்காக ஜெபம் செய்யுங்கள்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

---

## செய்தி: 63-09-01M அடையாளம்

---

243 ஓ, இதை பயபக்தியுடன் ஏற்றுக் கொள்ளுங்கள்.

நாம் ஒருவரிலொருவர் அன்பு கூர வேண்டும். ஓ, என்னே! நாம் அன்பில் அவ்வாறு நிலைத்திருக்க வேண்டும்.

ஒருவருக்கு விரோதமாக ஒருவர் ஒருபோதும் தீமையாகப் பேசவேண்டாம்.

யாராவது ஒருவர் தவறு செய்தால், உடனே அவருக்காக ஜெபம் செய்யுங்கள்.

நாம் இவ்விஷயத்தில் தேவனுடன் ஒன்றுபட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

நாம் சகோதரரும் சகோதரிகளுமா யிருக்கிறோம்.

ஓ, தேவ பக்தியாய் ஜீவியுங்கள், தேவனுடைய குமாரத்திகளைப் போல ஜீவியுங்கள், தேவனுடைய குமாரர்களைப் போல ஜீவியுங்கள்.

இனிமையாகவும், தயவாயும், தாழ்மை யாகவும் ஜீவியுங்கள்.

244 உங்கள் சிந்தையில், உங்க ளுடைய எண்ணத்தில் எவ்வித பொல்லாங் கும் நுழைய வேண்டாம். அதை அகற்றி விடுங்கள்.

அது கதவைத் தட்டினால், துரத்தி விடுங்கள்.

உங்கள் அடையாளத்தைக் காண்பியுங் கள்.

"நான் இரத்தத்தின் கீழ் இருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே நடந்து செல்லுங்கள்.





# சாத்தான் இதை இலக்காக வைத்து, நரகத்திலுள்ள துப்பாக்கி அனைத்தையும் இதற்கு விரோதமாக குறி வைத்திருக்கிறான்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: 63-07-14E உன்னை தாழ்த்து

நம்மைத் தாழ்த்தி தேவனிடத்தில் இன்னும் நெருங்கி வளருவோம். பாருங்கள்?

18. மறந்து விடாதீர்கள், இந்த கூடாரம் தன் அங்கத்தினர்களின் எண்ணிக்கையை இழக்கும். சாத்தான் இதை இலக்காக வைத்து, நரகத்திலுள்ள துப்பாக்கி அனைத்தையும் இதற்கு விரோதமாக குறி வைத்திருக்கிறான்.

ஒருவர் மற்றொருவரின் கருத்துக்கு முரணாக ஏதாவதொன்றைச் செய்யும்படி அவன் தூண்டுவான். அவன் அதை செய்து கொண்டிருக்கிறான். அதுவே அவன் பணி.

அவன் ஒருவருக்கு விரோதமாக மற்றவர், “கவனியுங்கள், இன்னார் இன்னார் இதை செய்தாரென்று உங்களுக்குத் தெரியுமா?” என்று பேசும்படி செய்வான். அதற்கு செவி கொடுக்காதீர்கள். அதற்கு செவி கொடுக்கவே வேண்டாம். அது பிசாசு. பாருங்கள், அது சாத்தான். அதை விசுவாசிக்காதீர்கள்.


யாராகிலும் ஒருவர் தவறு செய்தால், அவருக்காக ஜெபியுங்கள்.

சுயநல விதத்தில் ஜெபம் செய்து, “அது என் கடமை. அந்த சகோதரனுக்காக நான் ஜெபம் செய்ய வேண்டும்” என்று சொல்லாதீர்கள்.

நீங்கள் உண்மையில் இருதயத்தின் ஆழத்திலிருந்து அந்த சகோதரிக்காக ஜெபம் செய்யுங்கள்.

நீங்கள் பேசி இனிமையாயிருங்கள்.

முதலாவதாக என்ன நடக்கும் தெரியுமா, அவர்கள் ஆராதனைக்கு மறுபடியும் வருவதைக் காண்பீர்கள். பாருங்கள்? ஏனெனில் நாம் எல்லோரும் சூரிய அஸ்தமனத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம்.



சகோதரர்கள் ஒருவரோடொருவர் கைகுலுக்கி, ஒருவரை விட்டு ஒருவர் பிரிய மனதில்லாத நிலையை நான் கண்டிருக்கிறேன். அதுவே உண்மையான கிறிஸ்தவ ஐக்கியம்.
பாருங்கள்? காத்திருந்து, ஒருவருக்காக ஒருவர் ஜெபித்தல், ஆம், ஐயா.
அவ்விதமாகத் தான் நாம் இருக்க வேண்டும்.
சரி.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-06-01 இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல்

நாம் பாடும் இந்தப் பாடல் என் நினைவுக்கு வருகிறது.

நமது இருதயங்களை கிறிஸ்தவ அன்பினால்

பிணைக்கும் கட்டு ஆசீர்வதிக்கப்படுவதாக

ஒரே சிந்தையுடைவர்களின் ஐக்கியம்

மேலே கூறியது போல் இருக்கும்

நாம் பிரிந்து செல்லும்போது

அது உள்ளில் நமக்கு வேதனை தருகிறது

ஆயினும் நாம் இருதயத்தில் இணைக் கப்பட்டு

மறுபடியும் சந்திப்போம் என்று நம்பு கிறோம்.

206. பாருங்கள்? "நாம் பிரிந்து செல்லும் போது, அது உள்ளில் நமக்கு வேதனை தருகிறது. ''சகோதரரே, நான் அவ்விதமான நேரத்தைக் கண்டிருக்கிறேன் (நம்மைக் குற்றப்படுத்துவதற்காக அல்ல, நமக்கு ஒன்றன் பேரில் விழிப்புணர்வை உண்டாக்க), ஜனங்கள் ஒருவரையொருவர் சந்திக்க புதன் இரவு வரைக்கும் காத்திருக்க நேரிட்டால், அதற்காக அழுவது வழக்கம், அப்படிப்பட்ட நேரத்தை நான் இச்சபை யில் கண்டிருக்கிறேன். அது உண்மை.

போதகர்கள் இங்கு வருகையில், ''உங்களால் அவ்விதம் எங்ஙனம் செய்ய முடிகிறது?'' என்று கேட்டிருக்கின்றனர்.

நல்லது, அந்த ஜனங்கள் ஒரே இருதய முள்ளவர்கள். பாருங்கள்?

207. அவர்கள் கதவண்டையில் சந்தித்து... சகோதரிகள் அங்கு ஒருவரையொருவர் சந்தித்து கட்டித் தழுவி, "சகோதரியே, எனக்காக ஜெபிக்க தவறவேண்டாம், தேனே, நான் மறுபடியும் உன்னை புதன் இரவன்று சந்திக்கிறேன். எனக்காக ஜெபிப் பாய் அல்லவா? எனக்காக ஜெபி; நானும் உனக்காக ஜெபிப்பேன்" என்று கூறுவார் கள்.

அவ்விதம் செய்யும் போது, அவர் களுடைய கண்களிலிருந்து கண்ணீர் மல்கும்.

208. சகோதரர்கள் ஒருவரோடொருவர் கைகுலுக்கி, ஒருவரை விட்டு ஒருவர் பிரிய மனதில்லாத நிலையை நான் கண்டிருக்கிறேன். அதுவே உண்மையான

கிறிஸ்தவ ஐக்கியம். பாருங்கள்? காத் திருந்து, ஒருவருக்காக ஒருவர் ஜெபித்தல், ஆம், ஐயா. அவ்விதமாகத் தான் நாம் இருக்க வேண்டும். சரி.



# தேவனுடைய ஆவி உங்களுக்குள் இருக்குமானால், மற்றவர் தவறு செய்தபோதிலும் அவரை நீங்கள் நேசிப்பீர்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 63-07-14E உன்னை தாழ்த்து

நீங்கள் தேவனுடன் தொடர்பு கொள்ள விரும்பினால், அகந்தையுள்ள ஆவி உங்களைப் பிடிக்க அனுமதிக்க வேண்டாம்.

எந்த குரோதமும் உள்ளே வர அனுமதிக்காதீர்கள்.

யார் என்ன செய்த போதிலும், அவர்கள் தவறு செய்தால், அவர்களிடம் விரோதம் பாராட்ட வேண்டாம். பாருங்கள்?

நீங்கள் இனிமையாயும் தயவாயும் இருங்கள்.

நீங்கள் பாவத்திலிருந்த போது தேவன் உங்களில் அன்பு கூர்ந்தார் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள்.

தேவனுடைய ஆவி உங்களுக்குள் இருக்குமானால், மற்றவர் தவறு செய்த போதிலும் அவரை நீங்கள் நேசிப்பீர்கள்.

பாருங்கள், அவர்களுக்காக ஜெபியுங் கள், ஒருவரிலொருவர் அன்பு கூருங்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக தேவனிடத் தில் அன்பு கூருங்கள், ஒருவரிலொருவர் அன்பு கூருங்கள்.

தேவனிடத்தில் தாழ்மையாயிருங்கள், ஒருவருக்கொருவர் தாழ்மையாயிருங்கள். தேவன் அதை ஆசீர்வதிப்பார். அவர் என்ன செய்வாரென்று கூறுவது கடினம்.

வழக்கமாக ஒரு சபையின் எண் ணிக்கை அதிகரித்து, அது பெரிதாகிக் கொண்டு வர ஆரம்பித்தால், அப்படி ஏதாவதொன்று நடந்தால், அவர்கள் உண்

மையானதை விட்டு அகன்று சென்று விடுகின்றனர்.





நல்லது, வேதாகமம், “உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்” என்று கூறுகிறது. **ஒவ்வொரு நபரும் மற்றவருக்காக ஜெபம் பண்ண வேண்டும்.** நாம் பிரிவுகளாக உள்ள ஒரு குழு அல்ல; நாம் ஒரு முழு மொத்தமான, ஒன்று சேர்க்கப்பட்ட குழுவாகும். பாருங்கள்?




செய்தி: 53-06-09A பிசாசியல் (மதச்சார்பான மண்டலம்) #2

சபையானது மிக குளிர்ந்துபோய் அலட்சியப்போக்குடையதாய் ஆகும்போது, தேவனுடைய ஆடுகள் சற்றே ஒருமித்து நெருக்கமாக வந்து ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: ஆடுகளின் நல்ல மேய்ப்பன், 57–0308

ஆடுகள் ஒருவிதத்தில் சிறிய வேடிக்கை யான சிருஷ்டிகளாகும். இன்றிரவு ஆடு களைக் குறித்து நாம் கற்றுக்கொள்ளும் வேறொரு காரியம் இதோ. சீதோஷ்ண நிலையானது மிகவும் உஷ்ணமாக இருக்கும் போது, நீங்கள் எப்பொழுதாவது ஆடுகளைப் பார்த்திருக்கிறீர்களா? அவைகள் அப்போது தங்களை வேறுபிரித்துக்கொள்ளாது, அவை கள் ஒன்று ஓரிடத்திலும், ஒன்று வேறொரு இடத்திலும் தான் இருக்கும். ஆனால் சரியாக நாளின் உஷ்ணமான (நேரத்தில்), அந்த ஆடுகள் எல்லாமே ஒரேகூட்டமாக நின்று கொண்டிருக்கும். அவைகள் என்ன செய்து கொண்டிருக்கும் என்று தெரியுமா? அவைகள் ஒன்று மற்றொன்றுக்கு நிழலை உண்டாக்கிக்

கொண்டிருக்கும். அவைகள் ஐக்கியத்தை உடையவைகளாக இருந்துகொண்டிருக்கும்.

8. உஷ்ணம் இருக்கும்போது, தேவனுடைய எல்லா ஆடுகளும், ஒன்றுசேர்ந்து இருப்பார்களானால், அது நன்றாக இருக்காதா. சோதனைகள் மிகக் கடினமாக இருந்து, உஷ்ணமும் இருந்து, எல்லாமே எல்லா விடங்களிலும் நடந்துகொண்டிருக்கும்போது, தேவனுடைய சிறு ஆடுகள் யாவும் அப்படியே ஒன்றுசேர்ந்து இருப்பார்களானால், நாம் ஒருவர்மேல் ஒருவர் சாய்ந்துகொள்வதற்கு, ஒருவருக்கொருவர் நிழலின் குளிர்ச்சியையும், ஆதரவையும் கொண்டிருப்போமே.

இப்பொழுது, யாரோ ஒருவர், "அது அவசியம் தானா, சகோதரன் பிரன்ஹாமே?" என்று கேட்டார். நிச்சயமாக அது அவசியம் தான். பிரச்சனைகள் கொழுந்துவிட்டு எரிந்து, உஷ்ணம் இருக்கும்போது, ஒரு உண்மையான

நல்ல நம்பகமான நண்பனைக் கொண்டிருப் பதைப் போல எதுவுமில்லை, (அப்பொழுது) நீங்கள் இந்த நண்பரிடம் சென்று, உட்கார்ந்து, அப்படியே அதை அவர்களிடம் புரியும்படி சொல்லி, தனிப்பட்ட நம்பிக்கையில் அதை கலந்தாலோசித்து, அதன்பிறகு முழங்கால் படியிட்டு ஒருமித்து ஜெபம் பண்ணி, இந்த நபர் நீங்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய தேவனால் இரட்சிக்கப்பட்ட ஒரு நல்ல மனிதர் அல்லது ஒரு நல்ல பெண்மணி என்று அறிந்துகொள்ளலாம். ஓ, அதைச் செய்வது நன்றாக இருக்கும். "வழக்காடு வோம், வாருங்கள்," என்று வேதவாக்கியம் கூறுகிறது, அல்லது, "ஒன்றுசேர்ந்திருப்போம், வாருங்கள்" என்று.

மேலும் ஆடுகள் ஒரு குளிரான தேசத்தில் இருப்பதை நான் காணும்போது, நான் வேறொரு காரியத்தைக் கவனித்திருக் கிறேன். பனிப்புயல் வரும்போது, எல்லா

ஆடுகளும், வீசும் காற்றை தடுக்கும்படி, அந்த எல்லா சிறு ஆடுகளும் வயலின் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் வந்து, ஒன்றாக ஒரே கூட்டமாக நெருங்கிவரும்; அப்பொழுது அது ஒன்றையொன்று வெதுவெதுப்பாக வைத்துக்கொள்ளும். ஒவ்வொரு சரீரத்திலிருந் தும் வரும் வெப்பமானது மற்றது வெது வெதுப்பாக இருக்க உதவும்.

9. சபையானது மிக குளிர்ந்துபோய் அலட்சியப்போக்குடையதாய் ஆகும்போது, தேவனுடைய ஆடுகள் சற்றே ஒருமித்து நெருக்கமாக வந்து ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்க வேண்டுமென்று நான் நினைக்கி றேன். மிக நல்ல கிறிஸ்தவ ஐக்கியத்தின் நேசமானது, ஓ, அது எவ்வளவு திடமாக உணரும்படி செய்கிறது. தாவீது முதலாவது சங்கீதத்தில் அதைக்குறித்து பேசியிருக்கிறான், அவன், “பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காராமலும், பாவிகளுடைய வழியில்

நில்லாமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரிய மாயிருந்து, இரவும் பகலும் வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்காலின் ஓரமாய் நடப்பட்டு, இலை கள் உதிராதிருக்கிற மரத்தைப் போலிருப் பான்; அவன் செய்வது எதுவாக இருந்தாலும், அது செழிக்கும்" என்று சொன்னான்.





# அருமை நண்பனே, நான் உமக்குச் சொல்லுகிறேன், சில முக்கியமான விஷயங்களில் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள மிகச் சிறந்த வழி ஜெபமே

61-10-15M
கேள்விகளும்
பதில்களும் COD #15

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# ஜெபம் காரியங்களை மாற்றி விடுகிறதென்று நாமறிவோம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

செய்தி: 61-10-15M கேள்விகளும் பதில்களும்

# ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து